குயில்

கிழமை இதழ்

ஆசிரியர் :

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 26-8-58 செவ்வாய் | இசை: 13

காதல்

சிறைபுகுமுன் வந்தால் வரச்சொல்

தென்பாங்கு.

கண்ணுக்கொரு வண்ணப்புரு
காதுக்கவள் கானக்குயில்
பெண்ணுக்கர சானவளை
வந்தால் வரச்சொல்—எனக்கே
பேச்சுப்படி ஆசைமுத்தம்
தந்தால் தரச்சொல் !

உள்நாட்டுச் சிற்றுடை
ஓரப்பட்டுப் பாவாடை
கண்ணுட்டி கட்டிப்போக
வந்தால் வரச்சொல்—கணக்கில்
கண்டபடி ஆசைமுத்தம்
தந்தால் தரச்சொல் !

அண்டைவீட்டுச் சின்னகண்ணே
அன்புடைய பொன்னுக்கண்ணே
வண்டிக்கே தவறிடாமல்
வந்தால் வரச்சொல்—மிகவும்
கண்டிப்பாய் வந்துமுத்தம்
தந்தால் தரச்சொல் !

கொண்டையிலே செங்கோங்கு
தண்டையிலே தென்பாங்கு
கொண்டவளைக் கண்டவுடன்
வந்தால் வரச்சொல்—அவளைக்
கண்டிப்பாய் வந்துமுத்தம்
தந்தால் தரச்சொல் !

நாட்டுக்கு மீட்சியடி
நம்தமிழர் ஆட்சியடி
நாட்டச்செல் வேன்அதற்குமுன்
வந்தால் வரச்சொல் — எனக்கே
நல்லபடி ஆசைமுத்தம்
தந்தால் தரச்சொல்!

காட்டுப் புலியடிநான்
கட்டிஎன்னைச் சிறையிடுவார்
கூட்டுக்குள் போகுமுன்னே
வந்தால் வரச்சொல் — பேசிக்
கொண்டபடி ஆசைமுத்தம்
தந்தால் தரச்சொல்!

புதுச்சேரி, தி. வ. ஆ கசுஅசு ஆவணி கம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் II

பைந்தமிழ் ஒழிக்கும் பாழுங் கிணறு ?

திராவிடமொழி ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும் என்ற எண்ணம் கருப்பத்தினின்று வெளிவந்தபோதே தமிழர்கள் தம் மகிழ்ச்சியை அடக்கமுடியாமல் தை தை என்று கூத்தாடினார்கள், அப்போதே. இந்த எண்ணத்தை உருப்பட வைப்பார்களா வடக்கர் என்று நாம் ஐயுற்றதுண்டு.

ஆனால் அது உருவாயிற்று. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அத்திட்டத்தை ஒப்புக் கொண்டு செயற்படுத்தவும் தொடங்கிற்று.

முதலில் அது அதற்கொரு குழுவை ஏற்படுத்தவேண்டும். அறிஞர்கள் அகப்படவில்லை. நம் பன்மொழிப் புலவர் ஒருவர்தாம் இருந்தார் தமிழ்நாட்டில்... உடனடியாக அவரைமட்டும் ஏற்படுத்தினார்கள்.

தேவநேயப் பாவாணர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அதற்கெனக் குறிக்கப்பட்ட இடத்தில் அமர்ந்து வேலையையும் தொடங்கினார் அவ்வளவுதான்...!

நீள நீள அஞ்சல்கள் பறந்தன வடநாட்டை நோக்கி! நீள நீளத் தந்திகள் பறந்தன வடநாட்டை நோக்கி! போதுமா? தமிழ் நாட்டிற் கிடைத்த படித்த அடிமைகளைப் பிடித்துத் துரத்தினார்கள் வட நாட்டை நோக்கி!

திராவிட மொழியை நடுவு நிலையினின்று ஒருவரோ — ஒருகுழுவோ ஆராயும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டால் வடமொழி தன் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ள நேரும்; வடமொழிச் சார்பான இந்திமுதலிய மொழிகள் முக்காடு போட்டுக்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல,

உலக மொழிகளில் தலையாய சில மொழிகளும் திராவிட மொழியால் வளர்ச்சி யடைந்த கதை, மலிவுப்பதிப் பாகிவிடும். இவ்வாறாகவே வடவர் மொழிகளாகிய சருகுகள் காற்றில் பறக்க யாரைக் கேட்க வேண்டும்?

அஞ்சல் பறந்ததில் வியப்பென்ன? தந்திகள் பறந்ததில் வியப்பென்ன? அடிமைகள் வடநாடு ஓடியதில் வியப் பென்ன?

வடநாடு இந்தக் கோளர்கட்கு நூற்றுக்கு நூறு ஒத்திருப்பதாகக் குறிப்புக் காட்டிற்று

கூலிகளாகிய இந்தக் கோளர்கள் சும்மா இருப்பார்களா?

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் சொன்னார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரிடம்; "ஏற்படுத்தப்பட்டிருக்கும் திராவிட மொழி ஆராய்ச்சிக் குழுவை மேற்பார்வை பார்க்க ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும்" என்று.

இப்படி தெ. பொ. மீ. சொன்னதின் பொருள் என்ன? தம்மை இப்படி ஏற்படுத்த வேண்டும் என்பதுதான்,

தெ. பொ. மீனாட்சியாருக்குத் துணை வேந்தர் ஒத்துப்போகாமலா இருப்பார்? ஒத்துக் கொண்டது மட்டுமன்று. தலையில் துணியைக் கட்டிக்கொண்டு களத்திலே இறங்கி விட்டார்.

வடக்கிலும் தெற்கிலும் இவ்வாறு எக்கச் சக்கமான கருங்காலிகளின் ஆதரவை எண்ணுந் தோறும் தெ. போ. மீ. வறுவடைச் சட்டியில்

நெற்பொரிபோலக் குதிப்பார். கக்கத்துக் [illegible]ந்தியை நன்ருகத் தீட்டிக் கொள்வார்.

ஒடுவார் அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தில் பாவாணரிடம்.

தேவநேயப் பாவாணரே, நீர் உம் வாயைத் திறக்கவே கூடாது. திராவிட மொழியின் உண்மையை வெளிப்படுத்தவே கூடாது; வெளிப்படுத்திஞல் தொல்லே வரும்.

இப்படி ஒரு கூலி! கையிருப்பில்லாத ஓர் ஆள் எண்ணெயில் விழுந்த பண்ணியம்போல் குதிப்பதென்ருல் பாவாணர்க்கு வியப்பாய்த் தான் இருந்திருக்கும் ஆனல் உற்று நோக்கித் தெ. பொ. மீ. யின் முதுகில் துணேவேந்தரும் இருப்பதைத்தெரிந்துகொண்டவராய் எண்ணக் கடலில் தொபீர் என்று விழுந்திருப்பார் பாவாணர். – இது பூச்சாண்டி இயக்கமாகப் போய்விட வில்லே.

வட இந்தியாவில், திராவிடமொழியை இருந்த இடந் தெரியாமல் ஒழித்தல் வேண்டும் என்ற எண்ணமுள்ள பெரியபெரிய தலேவர்கள் பெரிய பெரிய பேராசிரியர்களோடு இந்த, தெ. பொ. மீ.கலந்து உறவாடுவதைப் பாவாணர் நேரே கண்டார்.

தெ. பொ. மீ. சேது. நாராயணசாமிப் பிள்ளே ஆகியோர்க்கு வட நாட்டுத் தலேவர்கள் இன்னின்ன வகையில் பதவி கொடுப்பதாய் வாக்களித்துள்ளார்கள் என்பதையும் பாவாணர் கேள்விப் பட்டிருப்பார். பாவாணர் உள்ளம் அதிர்ச்சி அடைந்திருக்கும் ஆயினும் தளர்ந்திராது. ஏனெனில் பாவாணர் சட்டைப் பையில் நாலுகோடித் தமிழர்கள் இருக்கிருர்கள்.

எங்கேயோ இருந்த அதே தே. பொ. மீ. இப்போது எங்கே இருக்கிருர் தெரியுமா? அண்ணுமலேப் பல்கலேக் கழகத்திலேயே! என்ன சம்பளம் தெரியுமா? ஆயிரத்து ஐந்நூறு வெண்பொற் காசுகள். இந்தத் தொகை தனிச் சலுகையைக் காட்டுகிறது. தமிழ்ப் புலவர் களே காட்டிக்கொடுக்கும் தெ. பொ. மீ. க்கு நீங்கள் எல்லோரும் அஞ்சி நடுங்குங்கள் என்று கூறுகின்றது அந்தத் தொகை!

இன்னும் இது பற்றி விரிவாகப் பின்னர் எழுதலாம். இப்போது அமைக்கப்பட்டிருக்கும் திராவிட மொழியாராய்ச்சிக் குழுவில் யார் யார் இருக்கிருர்கள் என்பதைப் பார்ப்போம்.

தலேவர்:

டாக்டர். சுனித் குமார்சட்டர்ஜி.

மற்றவர்கள்:

டாக்டர். எஸ். எம். காட்டர்
திரு. A. சுப்பையா
டாக்டர். R. P. சேதுப்பிள்ளே
திரு. லெ. ப. கரு. இராமநாதன்செட்டியார்
திரு. சீகாந்தையா
டாக்டர். மு. வரதராசன்
டாக்டர். மா. இராசமாணிக்கம்
திரு. பி. திருஞானசம்பந்தம்
திரு. தேவநேயப் பாவாணர்

திராவிட மொழியாராய்ச்சிக் குழு இது தானே! இதில் தெ. பொ. மீ. இல்லேயே! ஆனுலும் இந்தக் குழு கூடும்போது தெ. பொ. மீ. கட்டாயமாக உடன் சேர்த்துக் கொள்ளப் படுகிருராம். பருப்பில்லாமலா திருமணம்?

அந்தக் குழுவில் தீர்மானங்கள் உரு வாக்கப்பட வேண்டுமே அதெல்லாம் தெ. பொ. மீ. தான்.

அந்தத் தீர்மானங்களே ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமே அதெல்லாம் தெ. பொ. மீ. தான்.

அந்தக் குழுவினர் தெ. பொ. மீ. சேது. சட்டர்ஜி ஆகியோரின் முடிவுக்கு ஒத்துவர வேண்டியதற்காக மற்றவர்களே நடுங்க வைக்க வேண்டுமே அதெல்லாம் தெ. பொ. மீதான்.

ஷை குழுவுக்குத் தலேவராகப் போடப் பட்டிருக்கும் சுனித்குமார் சட்டர்ஜி யார் தெரியுமா? சமஸ்கிருதத்தை உயிர்ப்பித்து அதை உலகிலும் தென்னுட்டிலும் பரப்பவேண்டிய தற்காக நிறுவப்பட்டிருக்கும் ஒரு நிறுவனத் தின் தலேவர். பார்ப்பனர்.

இவர் திராவிடமொழியை ஒழித்துக்கட்டி விட்டு மறுவேலே பார்ப்பதாக வாயில் வாய்க் கரிசி போட்டுக் கொண்டு தென்னுட்டிலே வந்து குந்திக்கொண்டிருப்பதைக் கொண்டே

இவருடைய முனைப்பை நாம் தெரிந்து கொள்ளலாம்.

எப்படித் தலைமைக்கு ஆள் தேடிப் பிடித்துள்ளார்கள் பார்த்தீர்களா? திறந்தபெட்டிக்குத் திருடனையே காவலுக்கு வைத்ததுபோல இல்லையா?

இன்னும் இதில் தெரிந்து கொள்ளவேண்டிய இன்றியமையாத செய்தி என்னவென்றால் நாவலந்தீவின் முதல்வர் நேருவே ஷிசட்டர்ஜியைக் கண்டு முடுக்கி அனுப்பினாராம். திராவிடம் தனக்குரிய மேன்மை, தகுதியினின்று துண்டாடப்படாவிட்டால் திராவிடர் இந்தியை ஒப்புக்கொள்வதெப்படி? இது அவர்களுடைய மாற்றமுடியாத எண்ணம்.

நேரு இதில் காட்டும் ஊக்கந்தான், மக்கள் நிலையில் வைத்து எண்ணமுடியாத தெ. பொ. மீ. சேது ஆகிய இருபிள்ளைகளும், அளவு கடந்த நெஞ்சுறுதியோடும் சுருசுருப்போடும் இந்த அழிப்பு வேலையில் இறங்கியதற்குக் காரணம் என்று தோன்றுகிறது.

ஒன்று கேளுங்கள்: இந்தக் கையிருப்பில்லாத சேதுப்பிள்ளை, தேவநேயப் பாவாணர்க்குப்பின்னால் சேர்க்கப்பட்ட சேதுப்பிள்ளை. திராவிடமொழி ஆராய்ச்சிக் குழுவினின்று தேவநேயப்பாவாணர் நீக்கப்பட வேண்டும் என்று மேலவர்க்கு அறிவிப்பு ஒன்று விளாசு விளாசென்று விளாசி இருக்கிறாராம்.

சேதுப்பிள்ளைக்குத் தெரியும் இந்தக் குழுவில் தமிழர்கள் பாவாணரை நம்பியிருக்கிறார்கள் என்று.

சேதுப்பிள்ளைக்குத் தெரியும் தேவநேயப் பாவாணர்க்குவரும் தீமை தமிழர்க்கு வந்த தீமையாகும் என்று.

அப்படித் தெரிந்தும் சேதுப்பிள்ளை இப்படிப் பெரிய கழி எடுத்து விளையாடுகின்றார் என்றால் பெரிய இடம் தமிழர்களைப் பார்த்துப் பல்லை நற நறவென்று கடிக்கிறது.

(தொடரும்)

அமைச்சர்

பத்தவச்சலனார்க்கு அறிக்கை

கேரளத் திற்கு நெல்ஏற் றுமதி
கெடுதி அன்றோ என்றுநாம் கேட்டால்
ஊரில் உள்ள தமிழர்கள் நிறைய
உண்ட மீதியை அனுப்பினேன் என்றே
ஓர் அமைச்சரே! பத்தவச் சலமே
உள்ளத்தை விற்றே உரைக்கின் றீரே
நேரு தந்ததா நீர்பெற்ற பதவி?
நேயத் தமிழர் உமக்கா பகைவர்?

நம்பிய மக்களை நட்டாற் றிற்கை
நழுவ விடுவது நல்லதா ஐயா?
தம்பதம் எண்ணிப் பிறர்க்கா ளாகித்
தம்இனம் வாட்ட விலங்குகள் ஒப்பாவே
வெம்பி இந்நாள் அழுதவர் நாளைக்கே
வேங்கைக ளாகி எழவும் கூடுமே
இம்மட்டும் போனது போகட்டும் இனிமேல்
இம்மி நெல்லும் அகலாமற் செய்கவே

திறமை அனைத்தையும் தன்னலத் திற்கே
செலுத்தி வந்த உம்மையே மீண்டும்
இறைமை கொள்ளச் செய்தனர் தமிழர்!
இன்னல் கொள்ளச் செய்வதா அவர்களை?
நிறைய இந்நாள் அதிகாரம் உம்மிடம்
நின்ற துண்டு நாளைக்கே அழியலாம்
அறிக ஐயா பத்தவச் சலமே
ஆயிரம் வரினும் இனங்கொல்ல வேண்டாம்!

அம்மை

"சித்தன்"

அம்மையெனுங் கொடுநோயால் விளையுந் தீமை
அறிந்தோர் நாம்; நம் நாட்டில் அதற்கே வெற்றி!
செம்மையுற வாழ்வோர்கள் அதனை வெல்வார்!
தெளிவில்லார் அதனையுமோர் தெய்வம் என்பார்!
கொம்மைமாகி லம்மையவள் இறைவி யென்றால்,
கொன்று பலர் ஆவியினைக் குடித்தல் செய்யாள்!
பொம்மைகளின் வெறும்பேச்சைப் புறந்தள் வோம் நாம்;
புரிந்துகொள்வோம் உண்மையினை; நலங்கொள் வோமே!

தூய்மையினை அறியோம் நாம்; அதனால் நேருந்
தொல்லைகளை ஏற்கின்றோம்; உடலே தீர்நஞ்
சாய்விடுமிந் நோயாலே! சிறுவர் மேனிச்
சருக்கரையிக் கொடும்பேய்க்கே! பழத்தில் ஊசி,
பாய்வதுபோல், மக்களுடல் பாய்ந்தோ ராண்டிற்
பன்னூறு யிரவருயிர் பருகும்! இந்நோய்
ஆய்ந்தோர் சொல் கேட்டு, நலன் அடைவோம்; இன்றேல்
ஆளனிலாப் பெண்டிர்போல் அழகு பாழாம்!

பரமாணுக் குண்டெரியிற் பட்டா ரோத்தார்
பல சிறுவர்; கண்ணிழந்தார் பருவ மாதர்!
உரமேறு தைந்தாண்டுக்குக் குட்பட் டாரோ,
உயிர்துறந்தார்; உறுப்பு முட முற்றார் பல்லோர்
பரவாமல் அம்மைநோய் தடுக்க, மேலோர்
பசுக்கன்றில் பாலியற்றிப் பாய்ச்சு கின்றார்!
வரவேற்றே யாண்டுக்கோர் முறையப் பாலை
வைத்தம்மைக் கொடும்போரில் வாகை கொள்வோம்!

அம்மையிலே பதினான்கு வகைகள் உண்டென்
றாயுள்நூ லறிந்தார்கள் அறைந்தார்; இந்நோய்
செம்மையுறத் தீராமற் போயின், நூறு
திருவுருவில் உயிர்வாட்டும்; குறிகள் கேளீர்:
தும்மலொடு காய்ச்சல்மிகும்; இருமல் கொல்லும்;
துடிப்பாகும் நாடி, நா வரண்டு போகும்;
வெம்மையினால் கண்சிவக்கும்; வாந்தி, நெற்றி
வெகுவலியாம்; தோல்வரண்டு விளங்கும் கண்டீர்!

(தொடரும்)

இலவு பழுத்தது!

புதுச்சேரி காங்கிரஸ்காரர்கள் தகராறு தீர்ந்துவிடும் என்று எதிர்பார்த்தது இலவு பழுக்குமென எதிர்பார்த்த கதையாயிற்றும்.

புதிய மந்திரிசபை அமைப்பது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த காமராசரைக் காணச் சென்றவர்கள் தங்கள் உருவத்தைக் காட்டி விட்டார்களாம்.

முயற்சி தோல்வி யடைந்ததாம்.

★ ★ ★

சிக்கல் சுப்பிரமணியம்...

உலகத்தில் எந்த ஒரு சிறு நாடும் சுதந்திரமாகத் தனித்து வாழ முடியாது. ஐரோப்பாவில் உள்ள சிறிய நாடுகள் எல்லாம் (பெரிய நாடாகிய இந்தியா ...?) ஏதாவது ஒரு வல்லரசைத்தான் நம்பி வாழ்கின்றன. ஆகவே தமிழ்நாடு தனியாகப் பிரிந்தாலும் சுதந்திரத்துடன் தனித்து வாழ முடியாது. வல்லரசுகள் கையில் சிக்கிக் கொள்ள நேரிடும்.

ஆகவே பிரிவினை என்பது பற்றிப் பேசுவது நாட்டு முன்னேற்றத்துக்கு ஆபத்தானது.

மேற்கண்ட கருத்தை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தான் வெளியிட்டிருக்கிறார் கோவையில் ஒரு பொதுக்கூட்டத்தில்...

★ ★ ★

சிறை மீண்டார்க்குத் தில்லையில் வரவேற்பு

பெரியார் நகர்வலக் காட்சி

அவர் தாம் பெரியார்—பார்
அன்புமக்கள் கடலின் மீதில்
அறிவுத் தேக்கம் தங்கத்தேரில்
(அவர்தாம்)

மக்கள் நெஞ்சில் மலிவுப்பதிப்பு
வஞ்ச கர்க்கோ கொடியநெருப்பு
மிக்க பண்பின் குடியி ருப்பு
விடுதலைப் பெரும் படையின்தொடுப்பு
(அவர்தாம்)

தில்லி எலிக்கு வான்பருந்து
தெற்குத் தினவின் படைமருந்து
கல்லா ருக்கும் கலைவிருந்து
கற்ற வர்க்கும் வண்ணச்சிந்து
(அவர்தாம்)

சுரண்டு கின்ற வடக்கருக்குச்
சூள் அறுக்கும் பனங்கருக்கு
மருண்டு வாழும் தமிழருக்கு
வாழ வைக்கும் அருட்பெருக்கு
(அவர்தாம்)

தொண்டு செய்து பழுத்தபழம்
தூய தாடி மார்பில்விழும்
மண்டைச் சுரப்பை உலகுதொழும்
மனக் குகையில் சிறுத்தைஎழும்
(அவர்தாம்)

தமிழர் தவம்கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயுந்தலை மேடை
நமக்குத்தாண்டி அந்த வாட்படை
நமைஅவரின் போருக் கொப்படை
(அவர்தாம்)

எனை மறந்தான்

தென்பாங்கு - கண்ணிகள்

கண்ணைப் போட்டான் என்மேலே!
கையைப் போட்டான் தோள்மேலே!
மண்ணை அள்ளிப் போட்டாண்டி
என் வாழ்விலே! - ஒரு
பெண்ணைக் குழியில் போட்டாண்டி
இந்நாளிலே!

காலைப் போட்டான் என்வீட்டில்,
கதையைப் போட்டான் என்காதில்,
வேலைத் தூக்கிப் போட்டாண்டி
என் நெஞ்சிலே! - என்
தோலை நெருப்பில் போட்டாண்டி
இந்நாளிலே!

பல்லைப் போட்டான் என்உதட்டில்,
படியைப் போட்டான் முத்தளக்க
கல்லை வாரிப் போட்டாண்டி
என் தலைமேலே! - சொன்ன
சொல்லை மறந்து போனாண்டி
இந்நாளிலே!

பூவைப் போட்டான் என்தலைமேல்
பொடியைப் போட்டான் நான்மயங்க
சாவைத் தூக்கிப் போட்டாண்டி
என் வாழ்விலே! - இந்தப்
பாவையைத்தான் மறந்தாண்டி
இந்நாளிலே!

பிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி கூ. (தொடர்ச்சி)

[தூக்கைத்தட்ட அரசன் கட்டளையிட்ட மறுகணம் நான்தான் கொலை செய்தேன். அமைச்சரைக்கொல்ல வேண்டாம் என்ற ஒரு குரல் கூட்டத்தினின்று எழுந்தவுடன் குரல் வந்த பக்கம் எல்லாரும் திரும்பினார் கள்.]

அரசன்: தவிப்பு நிலையில் வியப்பின் ஒளி! மேடைக்கு வரவேண்டும்.

(குரல் உடையான் வந்து மேடையில் ஏறிக் காட்சியளிக்கின்றான்)

குரல் உடையான்: நான்தான் கொலை செய் தேன். என்னைத் தூக்கில் போடும்படி அரசரை வேண்டிக் கொள்ளுகின்றேன்.

அரசன்: உன் பெயர்?

குரல் உடையான்: கூற விருப்பமில்லை.

அரசன்: எந்த ஊர்?

குரல் உடையான்: கூற விருப்பமில்லை.

அரசன்: இறந்த மங்கைக்கும் உனக்கும் என்ன தொடர்பு?

குரல் உடையான்: கூற விருப்பமில்லை.

அரசன்: கொலை புரியக் காரணம்?

குரல் உடையான்: கூற விப்பமில்லை.

அரசன்: கொன்றவன் நீ மட்டுமா? மற்ற வரும் துணைபுரிந்தார்களா?

குரல் உடையான்: நான் மட்டும்

அரசன்: கொலைக் கருவி வாளா? வேலா? கட்டாரியா?

குரல் உடையான்: பயனற்ற கேள்வி.

அரசன்: குற்ற விளக்கம் இல்லாமல் கொலைசெய்ய முடியுமா உன்னை?

குரல் உடையான்: கொன்றவன் ஏற்றுக் கொள்ளுகின்றான் கொலை விளக்கம் தேவை யில்லை.

அரசன்: கொலை செய்த ஒருவன் கூலிக்கு ஆள் பிடித்துக் கொலை செய்ததாக ஒப்புக் கொள்ளச் சொல்லியிருக்கலாமன்றோ.

குரல் உடையான்: வீண் மனக்குழப்பம்.

அரசன்: உன்னை இன்னான் என்றும் கூற வில்லை. கொலை செய்ததற்குக் காரணமும் கூற வில்லை. மூன்றுநாட்களில் அமைச்சர் ஆராய்ச்சி செய்து உண்மையை விளக்கவேண்டும். தவறி னால் அமைச்சரும் நீயும் தூக்கிலிடப்பட வேண்டும். இது என் தீர்ப்பு!

(கூட்டம் கலைகிறது.)

ஒரு புறம்:

பார்த்தவன்: க. குற்றத்தை ஏற்றுக்கொண் டவன் இந்த நாட்டானா?

பார்த்தவன்: உ. அதிலும் ஐயமா?

பார்த்தவன்: ங. அவன் சோழநாட்டான் என்று தோன்றுகின்றது.

பார்த்தவன்: ச. சோழநாட்டில் இத்தகைய கொலைகாரன் இருக்கவே மாட்டான்.

பார்த்தவன்: டு. நான் உறுதியாகக் கூறு கின்றேன். அவன் சோழ நாட்டான்.

பார்த்தவன்: சு. சோழநாட்டான் பாண்டிய நாட்டில் வந்து இப்படிப்பட்ட படுகொலை செய்கின்றவரைக்கும் என்ன செய்து கொண் டிருந்தான் பாண்டிய நாட்டான்? இதெல்லாம்

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

சட்டச் சுவை

இதிலேயுள்ள சட்ட என்ற சொல் ஷட் என்ற வட சொல்லின் சிதைவென்று கூறி மகிழ்வார் பார்ப்பனரும் அவரடியாரும்.

இத்தொடரில் சுவை என்பதையும் ரசம் என்று மாற்றி ஷட்ரசம் என்பார்கள்.

சட்ட என்பது வட சொல்லா என்பது கேள்வி.

சட்ட என்பதைச் சிவஞான போத உரையாசிரியர் செம்மைப் பொருட்டாவதோர் அகர ஈற்றிடைச் சொல் என்று கூறியுள்ளதை முதலில் நினைவில் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

சட்ட என்பதன் பொருள் சிறப்பு செம்மை என்பனவாகும்.

சட்ட என்பது "பிட்டுநேர்பட" என்ற திருவாசகச் செய்யுளிலும் பிறவற்றிலும் வந்துள்ளது.

சுவை என்பது ஆகுபெயராகி உணவைக் குறிக்கும். எனவே சட்டச்சுவை, சிறப்புணவு என்பதாம்.

திருமணம் முடிந்தவுடன் முதன் முதலாகத் தன் கணவனுக்கு மனைவி உணவு இடுவதை ஒரு சடங்காக வைத்துக் கொண்டனர் பார்ப்பனர். அவ்வாறு இடுவதற்கு அவர்கள் சட்டரசம் என்பார்களாம் இவ்வாறு கூறிய, விளம்பி ஆவணிக் கலைமகள் சட்டரசம் என்பதில் உள்ள சட்ட என்பது ஷட் என்ற வட சொல்லின் திரிபே சட்ட என்று கோணற் கோடு இழுக்கிறது.

சட்டச் சுவையைச் சட்டரசம் ஆக்கி, அதன் பின் ஷட்ரசம் ஆக்கிக் காட்டும் கலைமகளின் போக்கு மானமற்ற போக்கே என்க.

அது பொருள் கூறுகிறது ஷட்ரசத்துக்கு ஷட்ரசம் என்றால் அறு சுவையாம்.

அறுசுவை என்று கூறி விட்டால் சிறப் புணர்வைக் குறித்ததாகுமோ? உணவுக்கு அறு சுவை என்பது இயற்கை அடைமொழி என்பர். உணவில் அறுசுவைக்குத் தாழ்ந்த ஐஞ்சுவை நாற்சுவையும் உண்டோ

ஷட்ரசம் என்பதற்கு அறுசுவையுணவு என்று கலைமகள் கொண்ட பொருள் சிறவாமை காண்க.

சட்டச்சுவை, அல்லது சட்டரசம் என்பதில் உள்ள சட் என்பது தூய தமிழ்ச்சொல்லே என்க.

செட்டி

இது ஸ்ரேஷ்டி என்ற வட சொல்லின் சிதைவாம்.

ஷ்டி சட்ட என்பது சகரம் தமிழில் மொழிக்கு முதலில் வரநேர்ந்த பின் தோன்றிய சொல். அதற்கு முன் இது செட்ட என்றே இருந்ததென அறிதல் வேண்டும். இந்த இடைச் சொல்லடியாகப் பிறந்ததே செட்டு, செட்டி என்பன. நடுவுநிலை என்பதுதான் இதன் வேர்ச் சொல்லின் பொருள்.

தமிழில் பண்டு தொட்டு வழங்கும் செட்டு செட்ட செட்டி முதலிய சொற்களைப் பிற மொழிமாந்தரும் எடுத்தாண்டார்கள். சேட் என்ற சொல்லையும் நோக்குக.

எனவே செட்டி தூய தமிழ்ச்சொல்லே!

★

வீண்பேச்சு! கொலை செய்ததாக ஒப்புக் கொண்ட ஆள் பாண்டிய நாட்டான்தான்.

பார்த்தவன்: எ. எல்லாரும் நல்லவர் எல்லாரும் செல்வர் பாண்டிய நாட்டில்.

பார்த்தவன்: அ. அது தவறு பாண்டிய நாட்டில் எல்லாரும் கொலைஞர், எல்லாரும் வறியர்.

(காட்சி முடிகின்றது.)

நேரு நாவடங்க வேண்டும்!

"இலங்கையில் நடக்கும் கலவரங்கட்கும் நமக்கும் சம்பந்தமில்லை."

"தமிழர் சிங்களவர் மோதலினுல் தமிழர்களுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டதென்பதைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை."

"இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாது."

"இலங்கையிலிருந்து தமிழர்கள் போதுமான வசதியோடு வெளியேறுகிறுர்கள். அவர்களுக்கு உதவி தேவையில்லை."

'இலங்கைவாழ் தமிழர் சொந்த நாடற்றேர்'

அவ்வப்போது ஆசியஜோதி வெளிட்ட கருத்துக்கள் இவை.

ஆப்ரிக்காவில் மலான் கூட்டத்தார் கையாண்டுவரும் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்து மணிக்கணக்காகப் பேசும் பண்டிதர்தான் இலங்கைக் கலவரங்கட்கும் நமக்கும் தொடர்பில்லை என்கிறுர்.

பாகிஸ்தானில் வடஇந்தியர்கள் விட்டுவந்த சொத்துக்களுக்கு நட்ட ஈடு கோரி நாடோறும் கடிதமெழுதியும், தூதுக்குழுவையனுப்பியும் பேச்சு வார்த்தை நடத்தும் நேருபண்டிதர்தான் இலங்கைத் தமிழர்கட்கு ஏற்பட்டுள்ள நட்டத்தைப்பற்றி நமக்குக் கவலையில்லை என்கிறுர்.

வடநாட்டுப் பனியாக்கள் நாடு பிரிவினையின் போது பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஓடி வந்தகாலை அவர்களை வரவேற்று மறுவாழ்வு அளிக்க 345 கோடி ரூபாய் செலவிட்ட நேருதான் இலங்கைத் தமிழர்கள் வசதியோடு வெளியேறுகிறுர்கள் என்று கூறுகிறுர்.

யூதர் அரேபியர் வெறியாட்டங்களின்போழ்து வருத்தந்தெரிவித்து, சிறுபான்மையினரின் நலன்களைப்பற்றிச் சிறப்புரை ஆற்றிய பஞ்சசீலக் கர்த்தர்தான் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாது என இயம்புகிறுர்.

'World History' என்றபெயரில் உலக வரலாறு எழுதிய உத்தமர்தான் இலங்கைத் தமிழர்கள் நாடற்றவர்கள் என்று ஆணவத்தோடு பேசுகிறுர்.

அமைச்சராகிவிட்டால் – ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துவிட்டால், ஆராய்ச்சியின்றி எதைப்பற்றி வேண்டுமானுலும் பேசிவிடலாம் என்று எண்ணிவிட்டார்போலும் நேருபண்டிதர். இல்லையென்ருல், நாடற்றவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று துணிந்து கூறமாட்டார்.

படைகொண்டு நாடு பிடித்த மோரியர் காலத்தும், மொகலாயர் காலத்தும் தனியரசு செலுத்தி வந்த தமிழரைக் கைவிரித்து வந்த கயவர், வேதத்தின் பேர்சொல்லித் தெற்கை வளைத்த வரலாற்றை மறந்து பேசுகிறுர்.

நேற்று திருச்சியிலே விருப்பமிருந்தால் இரு. இல்லையானுல் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டுவெளியேறு என்று ஆயிரம்ஆயிரம் தமிழர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு கூவிப்பேசிய பின்னும் தமிழ்ப்பெருமக்கள் ஆரத்திஎடுத்து டெல்லிக்கு அனுப்பிவைத்த காரணத்தால் அச்சமின்றிக் கூறுகிறுர் தமிழர்கள் நாடற்றவர்கள் என்று.

பொன்னிமயம் வென்று புலிக்கொடிபொறித்து, கங்கை கொண்டு, கலிங்கம் வென்று, நிலம் விட்டுக் கலம் ஏறிக் கடாரம், சாவகம், புட்பகம் முதலிய நாடுகளில் வாகைசூடி, தமிழர் வீரத்தை இழித்துக் கூறிய கனகவிசயர் தலையிலே கல்சுமக்கச் செய்த தமிழன் வழிவந்தோர்தான் இன்னும் தெற்கே இருப்பவர்கள்என்பதை அறியாதுஉளறுகிறுர் நேரு வடவரின் வலிமையடக்கி வாகைசூடி இனவெற்றிக் கொடிதன்னைத் தமிழர்கள் ஏற்றும்நாள் தொலைவில்லை என்பதை இனியேனும் உணர்ந்து நாவடங்க வேண்டும் நேரு.

– மணி

செத்தபிள்ளையை ஆற்றில் எறிவது!

கற்பு நிலையறியார் கண்டவரைத் தாம்கூடிப்
பெற்ற குழந்தைகளைப் போராற்றில் — எற்றும்
வடக்கர் வழக்கம் அடக்க நினைத்தால்
நடக்கா துலகமன்றில் நாட்டு.

இந்தியை ஏற்பாயோ?

— பாரி —

பண்டொருகால் உனைப்பழித்தார் ஆரியர்என் றுரைக்கப்
படைதிரட்டிப் புறப்பட்டாய் பழிதுடைக்க வென்றே
மண்டியிட வைத்தாய்,பின் மாமலையின் மீது
மறத்தமிழர் முக்கொடியை நிலைநாட்டி வீரம்
கண்டுகன கர்தலைமேல் கல்லேற்றிக் கொணர்ந்து
கண்ணகியாம் தேவிக்குக் கலைக்கோவில் கண்ட
தண்டமிழா உன்னுடைய பழம்பெருமை எங்கே?
தகுதியிலா இந்திக்குத் தலைவணங்கல் முறையோ?

ஆழ்கடலில் முத்தெடுத்தாய்; அறநூல்கள் யாத்தாய்;
அறம்பொருளாம் இன்பமென முப்பாலைக் கொண்டாய்;
யாழ்குழலோ டதிர்ந்திடுநல் அணிமுரசம் கண்டாய்;
யாப்புமொழி இலக்கணநூல் பலப்பலநீ படைத்தாய்;
வீழ்இருவர் தங்காதல் வாழ்க்கையினைப் பகர்ந்தாய்;
வியந்துலகம் நனியேத்தும் இசையொடுநீ வாழ்ந்தாய்;
பாழ்வடவர் மொழியன்று புகவிட்ட தமிழா!
பரிந்தேற்றுக் கொள்வாயோ பகைஇந்தி தனையே?

சீறிவரும் கொடும்பகையைத் துச்சமென மதித்துச்
செங்குருதி நிலனோடைப் போர்செய்த தமிழா!
ஊறுவரும் செந்தமிழ்க்கென் றுன்னுது வடவர்
ஓதுமொழி தனையேற்றுக் கொண்டதனா லன்றோ
வேறெவரும் புகமுடியாத் தமிழர்திரு நாட்டில்
வஞ்சனையால் வடவர்புகுந் தமுதமெனு மொழியைக்
கூறுபல செய்துருவைச் சிதைத்தனர்பின் இந்நாள்
கொண்டுவரும் இந்திக்குத் தலைசாய்த்தல் அழகோ?

★★★★★★★★★★★★★★★

ஆந்திராவைப் பார்!

—★—

ஆந்திர நாட்டு உயர்நீதி மன்றத்திலும்; பிறநீதி மன்றங்களிலும் நடக்கும் எல்லா நடவடிக்கைகளையும் தெலுங்கு மொழியிலேயே நடத்த வேண்டி டெல்லியைக் கேட்டிருக்கிறதாம் ஆந்திர அரசு.

இச்செய்தியை மந்திரி காளா வெங்கட்ராவ் ஆந்திர சட்டசபையில் வெளியிட்டிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★

பம்பாய் ஆர்ச் பிஷப்புக்கு!

பம்பாய் பிஷப்பாரே பாழ்மதங்கள், இங்குள்ள
கம்யூனி சத்தால் கரைபடியுமென்றா — வெம்புகின்றீர்
பார்ப்பான் தலைவன்! படிதாண்டார் மற்றவரும்!
பார்ப்பானா பாழ்க்க மதம்?

(மதம் பாழாகப் பார்ப்பானா? என்பது மூன்றாவது அடியின் பொருள்.)

சிரிப்புத்தான் வருகுதையா...

○ சேலம், மாரி. அறவாழி ○

வள்ளலார் சந்தில் ஒரு நடுத்தரமான வீடு. முன்புறச் சுவர்களிலும் கதவுகளிலும் பட்டை நாமங்கள் தீட்டப்பட்டு இருந்தன. வாயிலருகே அந்த வீட்டின் அம்மையார் பூசணிப்பழம்போன்ற தன் பருத்த உடலை இருத்தியிருந்தாள். பக்திப் பழமாய் அவள் நெற்றியிலும் மெல்லிய நாமம் துலங்கிக் கொண்டிருந்தது.

வாசலில் ஒரு பிச்சைக்காரி. வற்றிய உடல், சொறி நிறைந்த கைகால்கள், மலம் ஒழுகும் கண்கள், இந்தக் கோலத்துடன் நின்றிருந்தாள். அவள் உடல் முழுவதும் சீழும், முடை நாற்றமும் வீசிக் கொண்டிருந்தது. தெருவில் சென்றோர் நாசியை மூடிக்கொண்டு நடந்தனர்.

பிச்சைக்காரியின் இடுப்பில் ஒரு பால் மணம் மாருக்குழவி, துவண்டு கிடந்தது. அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு ஒரு நான்கு வயதுச் சிறுவன் அருகே நின்றிருந்தான். எலும்பு வெளி வந்த அவல உடலமைப்பு. பாவம் பல நாள் சோற்றைக் காணாதவன்! அவன் கைகளிலே உடைந்த தகரக் குவளையொன்று இருந்தது.

பிச்சைக்காரி தன் பாட்டைப் பாடினாள்.

''அம்மா! தாயே! மூணு நாளாகுது சாப்பிட்டு. கொஞ்சம் கஞ்சியிருந்தா ஊத்துமகராசி பச்சைக் குழந்தே மொகத்தைப் பாருதாயே......''

பிச்சைக்காரியின் குரலைக்கேட்டு 'பக்திப்பழம்' அம்மையார் வெகுண்டாள். விரட்டினாள்.

''ஏண்டி மூதேவி! நல்லநாளும் அதுவுமா உன்னைப் பார்த்தாலே கர்மம் பிடிக்குமடி சனியனே. அப்பாலேபோ''

முணுமுணுப்போடு பிச்சைக்காரி நகர்ந்தாள் அடுத்தவீட்டிற்கு. அங்கும் அவளை எல்லோரும் விரட்டினர். அடுத்தவாசலை எட்டினாள், அந்தவீட்டுக்காரர்கள் அவள்மேல் தண்ணீரைக் கொட்டி நாயை விட்டு விரட்டினர். இப்படியே பல வீட்டு வாசல்களிலும் ஏறி இறங்கினாள். ஒருவாய் அன்னம்மட்டும் எங்கும் கிடைத்திலது.

ஒருவீட்டில் விருந்து நடந்து கொண்டிருந்தது. எச்சில்இலைகள் குப்பைத் தொட்டியில் நிரம்பிக் கொண்டிருந்தன அவற்றை நக்கிக் கொண்டிருந்த நாய்களை விரட்டிவிட்டு, சிலபையன்கள் அந்த இடத்தைச் சூழ்ந்து உட்கார்ந்தனர்: எச்சில்உணவுகளை வழித்து சுவையோடு நக்கினர்.

பிச்சைக்காரியின் மகன் அதைக் கண்ணுற்றான் அவன் நாவில் நீர் ஊறியது. கண்களில் ஆவல் சுரந்தது. கையை அவர்கள் பக்கம் நீட்டிக்கொண்டு அழுதான்.

''அம்மா! சோறு... சோறு! அதா அவுங்கஎல்லாம் திங்கறுங்க எனக்கும் வாங்கித் தாம்மா......''

தாய் அவனை அடக்கினாள். அவனோ அடம் பிடித்தான் எச்சிலை உண்டவர்கள், அதைக் கண்டு சிரித்தனர், ''டுய் டுய்'' என்று பையனைப்பழித்து அழகுகாட்டி விளையாடினர்.

பிச்சைக்காரி மகனை இழுத்துக் கொண்டு நடந்தாள்.

வாசலில் பெண்கள் கோலமிட்டுப் பெருக்கிக் கொண்டிருந்தனர், சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்; தாய்மார்கள் கூட்டமாக உட்கார்ந்து, தாங்கள்பார்த்த திரைப்படத்தில் ''அம்மாபசிக்குதே தாயேபசிக்குதே'' என இரண்டு குழந்தைகள் பாடிக்கொண்டு பிச்சையெடுத்ததை மனமுருக விளக்கிக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களில் ஒருவரது மனம்கூட இந்தஉண்மைப் பிச்சைக்காரக் குழந்தைகளின் கதறல் கேட்டு இரங்கவில்லை.

சோர்வோடு பிச்சைக்காரி நடந்தாள். தெருக் கோடியில் உயர்ந்த மாளிகையொன்று தெரிந்தது. அதன் வாசலில் சென்று நின்றாள். ''அம்மாதாயே'' என்று குரல் கொடுத்தாள்.

'இன்பஊர்தி' யொன்று அன்னமென அசைந்து வந்து வாசலில் நின்றது, அதிலிருந்து மின்னல் கொடிநேர் பெண்ணொருவளும், அன்னவளைத் தொடர்ந்து இளைஞன் ஒருவனும் இறங்கினர்; பெண்ணின் கண்கள் பிச்சைக்காரியைக் கண்டன; விழிகளில் நீர்தழும்பியது, உள்ளே ஓடினாள். ஒருதட்டு நிறைய இனிய உணவுப் பொருள்களைக் கொணர்ந்து நீட்டினாள்.

பிச்சைக்காரி நன்றியோடும் மகிழ்ச்சியோடும் ஆவலோடும் தன்சட்டியில் அவற்றைப் பெற்றுக் கொண்டாள், சிறுவன் களிக் கூத்தாடினான். உற்சாகத்தால் துள்ளினான் குதிநடையிட்டான்.

தாயும் மக்களும், நாமதாரியின் இல்லத்தருகே இருந்த மரத்தடியை அடைந்தனர், பரபரப்போடு உட்கார்ந்தனர், உணவைப் பிசைந்தனர்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருந்த "பக்திப்பழம்" அம்மையார் பிச்சைக்காரியை அழைத்தாள். பிச்சைக்காரி ஓடிச்சென்று அவள் முன் நின்ருள். "பக்திப்பழம்" கேட்டாள். "ஏண்டி! நீ எந்த ஊரடி...?" பிச்சைக்காரி பதிலளித்தாள் "திருச்செங்கோடுங்க அம்மா!"

- "இந்த சோறு எங்கே கிடைச்சது?" "அதோ அந்த மச்சு வீட்டுத் தாயிபோட்டது. மகராசி நல்லா வாழணும்."

"நீ என்ன சாதி...?" "ஏன் கேக்கறீங்க? சுத்தமான வீர சைவபரம்பரை அம்மா நான்!"

"அதுதான் இவ்வளவு அழகாயிருக்கறே! அவபோட்ட சோற்றைத் திங்கறே...!"

"ஏன் அவுங்களுக்கென்ன...? குட்டம் பிடிச்சவங்களா?" "அதைவிடக் கேவலம்...! அவ ஒரு திண்டப்படாத சாதிக்காரியடீ திண்டப்படாத சாதிக்காரி...! பணம் மட்டும் இருந்தால் போதுமா? வெட்கம் இல்லாமே அவ சோற்றைத் திங்கலாமா நீ...?"

அம்மையார் இதைக் கூறி முடிக்கவில்லை. பிச்சைக்காரி மரத்தடிக்குப் பாய்ந்தோடினுள். சிறுவன் தன் வாயருகே கொண்டு போன கவளத்தைத் தட்டி விட்டாள். நிறைந்திருந்த சோற்றுச் சட்டியை எடுத்துச் சாக்கடையில் உடைத்தெறிந்தாள். பையன் வீறிட்டான். பிச்சைக்காரி அவனைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு அம்மையார் முன் வந்து நின்ருள். அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. திக்கித் தடுமாறிப் பேசினுள்.

"அம்மா! மகாலட்சுமி! நல்ல சமயத்திலே உண்மையைச் சொல்லிப் புண்ணயத்தைத் தேடிக் கொண்டீங்க! கடுகு சிறுத்தாலும் காரம் போகாதுங்க...! ஐயோ! இந்நேரம் ... படுகுழியில் விழ இருந்தேனே!......"

அம்மையார் புன்னகை பூத்தாள். திருவாய் மலர்ந்தருளினுள்.

"போடிபே! பையன் கத்தருன். எங்காவது நல்ல இடத்திலே போய் வெறும் ஆகாரமாவது கொஞ்சம் வாங்கிக் கொடு பாவம்...!"

நீயென்ன செய்வாய்?

புலவர், தொல்காப்பியன்.

சிரிக்கின்ற மென்மலரில் தேனெடுத்து வந்து
சேகரித்து வைக்காத தேனிதழ்கொள் பாவாய்!
உரிக்கின்ற பலாச்சுளையின் சுவையைஅணைக் கின்ற
உடலெங்கும் வைத்திருக்கும் உயிர்த்துடிப்பே! [தொட்டு
விரிக்கின்ற சிறந்ததொரு நூலின்பால், கல்வி
விருப்பமுள்ளோர் மனஞ்சுற்று வதனைப்போல், [காதல்
எரிக்கின்ற உள்ளந்தான் உன்னழகைச் சுற்றி
எதைஎதையோ நினைப்பதற்கும் நீயென்ன [செய்வாய்?

ஓதுகின்ற தமிழினிலே சுவையுள்ள தென்ருல்,
உயர்தமிழின் குற்றமெனச் சொல்பவரும் உண்டோ?
சீதமதி தனிலழகு சேர்ந்திருக்கக் கண்டு
சின்னஅல்லி சிரிப்பதற்கும் மதியென்ன செய்யும்?
மோதுகின்ற அலைகளினுல் கரைஉடைவ [தைப்போல்,
முடிமன்னர் எடுத்திடுவாள் விழிபடைத்த [பெண்ணே!
மாதுன்றன் எழிலிலெந்தன் மனமுடைந்து போகும்
மற்றந்தச் செயலுக்கு நீயென்ன செய்வாய்?

சுற்றுகின்ற உலகத்தைப் போலென்றன் எண்ணம்
சுற்றுதடி உன்னழகைச் சுடர்நிலவே! கேள்நீ!
குற்றமிதில் உண்டென்ருல் குளிர்மழையே! [உன்னைக்
குவலயத்தில் பெற்ருேர்செய் குற்றமடி குற்றம்.
மற்ருென்று மாதரசே! எதுவென்ருல் உன்றன்
மதிமுகத்தைக் கண்டவிழிக் குற்றமடி குற்றம்.
குற்றமிவை அன்றியுன்றன் குற்றமில்லை, சிந்தை
குழம்புதற்கும், குதிப்பதற்கும் நீயென்ன செய்வாய்?

★

பிச்சைக்காரி அம்மையாரைக் கையெடுத்துக் கும்பிட்டு விட்டுத் தெருவில் இறங்கி நடந்தாள். அவள் வாய் பழைய பாட்டைப்பாடிக் கொண்டிருந்தது.

"அம்மா! தாயே!... சாப்பிட்டு நாலு நாளாச்சு......" அப்போது அந்த தெருவிலிருந்து இசைத் தட்டு முழங்கிக் கொண்டிருந்தது.

"சிரிப்புத்தான் வருகுதய்யா... உலகைக் கண்டால் சிரிப்புத்தான் வருகுதையா..."

★

கொய்யாக்கனி!

★ பட்டுக்கோட்டை, இராசேந்திரன் ★

கண்டோடி செவ்விதழ்தான் கனியோ; வானக்
காரோடி கரியகுழல் கடலோ; மொய்க்கும்
வண்டோடி நீலவிழி; புருவம் என்ன
வில்லோடி; உன்கைகள் செக்கர் வாழைத்
தண்டோடி; இடைஎன்ன கொடியோ; மார்பில்
தாரோடி செம்பவழச் சரமோ; சிற்பி
வெண்டோட்டு நறுமலர்கொண் டியற்றித் தந்த
மெல்லுடலோ உன்னுடலம்; எனநான் சொல்ல.

வெண்டோடு – வெண்மையான இதழ்

"அப்பப்பா போதுமினி அடுக்க வேண்டாம்
அமைந்திரே இப்பேதைக் கென்னைக் காணும்
எப்போதும் இதுதானு" என்பாள்; பின்னர்
எனக்களிப்பாள் பன்முத்தப் பரிசை; "அன்பீர்!
எப்போதோ நமது மணம்" என்பாள்; அந்த
எழிலரசி தனைப்பெற்றோர் அவளை உப்புச்
சப்பேதும் தெரியாத கிழமொன் றுக்குச்
சாதிஎனும் பெயர்காட்டி மணம்மு டித்தார்!

அன்னத்துக் கென்றமைந்த மணவா ளர்க்கே
அமைவான ஒருநோயால் மணத்தின் பின்னர்
சென்றசில நாளோடே அவர்தம் மூச்சும்
சென்றதுவாம்; அன்னவரை மணந்தா ளேனும்
கன்னியவள் கொய்யாத கனியே ஆனுள்!
கண்டவரில் சிற்சிலபேர் அந்தப் பெண்ணே
கொன்றிருக்கக் கூடுமெனக் குறைவாய்ச் சொன்னுர்.
கொந்தளித்த தென்னுள்ளம் அலைக டல்போல்!

மதுமலரை நான்மணக்க உளத்துள் எண்ணி
மகிழ்வுடனே ஊராருள் சிலரைக் கேட்டேன்,
"புதுப்பழக்கம் இதுவென்றுர் அரிவை தன்னைப்
போய்மணந்தால் இவ்வூரை விட்டே நாங்கள்
ஒதுக்கிவைப்போம்" என்றுர்கள்; ஊரார் தம்மால்
ஒருபயனும் இதுவரையில் பெற்றே னல்லேன்!
எதுவரினும் வரட்டுமெனத் துணிந்தோர் நாளில்
எழிலாளை மணந்தினிது வாழ்கின் றேன்நான்!

இதுதான் டெல்லி!

வடவர்கள் தொல்லைப் பட்ட ஒவ்வொரு சமயமும், தமிழர்கள் தாராளமாக உதவி செய்திருக்கிருர்கள். வடநாட்டில் பஞ்சம், பூகம்பம், வெள்ளம் என்று ஏற்பட்டபொழுதெல்லாம், தமிழர்கள் இலட்சம் இலட்சமாக வாரி வழங்கினுர்கள். கஸ்தூரிபாய் நிதிக்கும் காந்தி நிதிக்கும் தமிழர்கள் கொஞ்சமா பணம் கொடுத்தார்கள்?

வட அகதிகளுக்கு டெல்லி அரசாங்கம் ரூ. 345 கோடி செலவிட்டது. இதில் தமிழர்கள் தந்த வரிப்பணமும் இருக்கிறதே! அகதிகள் நிவாரண நிதிக்கு தமிழர்கள் அள்ளிக் கொடுத்தார்கள். வட அகதிகளை வரவேற்று, தமிழ் நாட்டில் கடைகள் கட்டிக் கொடுத்தார்கள், வியாபாரம் நடத்த வசதிகள் செய்து தந்தார்கள்.

இந்த நன்றி கூட இல்லாமல் இன்று தமிழ் அகதிகளை எட்டி உதைக்கிறது, டெல்லி.

டெல்லி தன் கையில் இருந்து பணம் செலவிட வேண்டாம். தமிழ் நாட்டில் இருந்து இதுவரை ரூ. 1000 கோடி சுரண்டி இருக்கிறதே, அதில் ஒரு சிறு தொகையைச் செலவிட்டால் போதும், தமிழ் அகதிகளுக்கு புதுவாழ்வு கிடைக்குமே!

இதற்குக் கூட தயாராக இல்லாத டெல்லியை, இனிமேலும் தமிழர்கள் நம்பி வாழ்வதில் பயன் இல்லை என்பது இப்போது தெரிகிறது அல்லவா?

–தினத்தந்தி தலையங்கம்.

24-8-58

பாரதிதாசன் கவிதைப் போட்டி
(ஒரு விளக்கம்)

போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாங்களாகவே கவிஞருடைய பழங்கவிதைகளிலிருந்தும், குயிலில் வெளிவரும் புதுக்கவிதைகளிலிருந்தும் தேர்ந்தெடுத்த பாடல்களைப் பாடலாம்.

கவிதைகள் முழுமையாகவோ, அல்லது பகுதிகளாகவோ பத்துமுதல் பதினைந்துநிமிடங்களுக்குள் பண்ணுடன் பாடவேண்டும்.

உரிமை வேட்கையும், சீர்திருத்த கருத்தும் ஊட்டக்கூடிய பாடல்கள் மட்டுமே போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். போட்டி நாளன்றே தேர்வு முடிக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி முறையே ரூ. 50/., 30/., 20/. ஆகியவற்றைத் தவிர, சீரங்கம் அன்பர் ஒருவரது அன்பளிப்பாக, நான்காவது பரிசாக ரூ. 10-ம் சான்றிதழும் வழங்கப்படும். மேலும் ஐந்தாவது முதல் ஐந்து பேர்களுக்கும் வெள்ளி பதக்கங்கள் வழங்கப்படும்.

போட்டி, செப்டம்பர் மூன்றும் வாரத்தில் **தந்தை பெரியார்** அவர்களின் பிறந்தநாள் விழாவில் நடக்கவிருப்பதால் மாணவர்களும் மற்றவர்களும் பெருவாரியாக கலந்துகொள்ள முன்வருமாறு கோருகிறோம்.

போட்டியில் கலந்துகொள்ளும்வெளியூர்த் தோழர்களுக்குத் தங்க வசதியும், உணவு வசதியும் செய்து தரப்படும்.

போட்டியிற் கலந்துகொள்ள விரும்புவோர் ஆகஸ்ட் இறுதிக்குள் பெயரைப் பதிவு செய்துகொள்க.

முகவரி:

சே. மு. அ. பாலசுப்பிரமணியம்
திருமகன் விலாச அரிசி ஆலை
பாலக்கரை, திருச்சி.

குயிலுக்கு...
பின் கண்ட ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை.

செங்கல்பட்டு.	மதுராந்தகம்.
தாம்பரம்.	செஞ்சி.
விழுப்புரம்.	பண்ணுருட்டி.
திருக்கோவிலூர்.	கோவில்பட்டி.
காரைக்குடி,	குடியாத்தம்.
தென்காசி,	விருதுநகர்.

★

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனியிதழ் வேண்டுவோர் 0-21 (இருபத்தி ஒன்று) காசு தபால்தலைகள் அனுப்புக.

★

விற்பனையாளர்கட்கு

முன் இதழ்கட்குரிய தொகையை இதுவரையனுப்பாத விற்பனையாளர்கள் உடன் அனுப்பிவைக்க.

பணமனுப்பாதவர்க்கு அடுத்த கிழமை முதல் இதழ்கள் நிறுத்தப்படும்.

★

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு:

முழுப்பக்கத்திற்கு ரூ. 100
அரைப்பக்கத்திற்கு ரூ. 50
கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக.

—அமைச்சர்.

குயில்

கற்பு

பெண்

(எடுப்பு)

பெண்ணென்றால் அவளல்லவோ பெண்? — உலகில்
(பெண்)

(உடனெடுப்பு)

கண்ணவள் மாமியர்க்கே காப்பவள் மாமனார்க்கே
உண்மையில் வாழ்க்கையிலே உயிராவாள் கணவனுக்கே
(பெண்)

(அடிகள்)

பொன்னான குணமுடையாள் பொய்யில்லா மனமுடையாள்
முன்னான அறமுடையாள் முத்தான சொல்லுடையாள்
தென்னாட்டின் பண்பாட்டில் தீராத பற்றுடையாள்
தன்வீட்டு விருந்தினர்மேல் தாய்போன்ற அன்புடையாள்
(பெண்)

மாண்புடைய தமிழ்நெறிக்கு மாத்தமிழர் புகழ்ஒளிக்குக்
கோணல்வந்தால் ஒருதுளிக்கு நாணம்வரும்அந் தக்கிளிக்கு
காணநல்ல நகைவேண்டாம் கற்பொன்றே அவள்பூண்டாள்
ஆணழகன் வீட்டினுக்கே அறம்வளர்க்கும் திருவிளக்கே
(பெண்)

காலையிலே தான்எழுவாள் கன்னித்தமி ழைத்தொழுவாள்
வேலைஎதிலும் வழுவாள் வீணர்நிலைக் கேஅழுவாள்
ஏலாத சாதிமுறை எள்ளளவும் அவள் தழுவாள்
ஞாலத்து வள்ளுவனார் நன்னெறிவிட்டே நழுவாள்
(பெண்)

பெண்டிர்க்குப் பெருமாட்டி பிள்ளைகட்கு வழிகாட்டி
அண்டிடும் ஏழைகளை ஆதரிப்பாள் அமுதூட்டி!
வண்டமிழ்த் தாயான வையத்து மூதாட்டி
தொண்டுக்கே அன்புகாட்டித் தொழுவாள்மன மலர்சூட்டி
(பெண்)

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன் புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.